Registered as a News Paper மக்கங்கள் 06 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

HE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 13 ( 25 - 04 - 1992 ) சனிக்கிழமை ஓசை: 67

## கிழக்கில் பயணிகள் வீடியோவில் பதிவு

கல்லாறு அதிரடிப்படை முகாமில் பஸ் பிரயாணிகள் வீடியோ மூலம் படம் பிடிக்கப்படுகின்றனர். பஸ் இலக்கங்களும் பதிவு செய்யப்படுகின்றன.

அண்மையில் அம்பாறை பஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்முனை - அம்பாறை வீதியிலும், கல்முனை-மட்டக்களப்பு வீதியிலும் இராணுவ சோதனைகள் அதிகரித்துள்ளன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் வசமுள்ள போர் கைதிகளை பௌத்த பிக்குகள் பார்வையிட்டனர்

## அரசு மீது கைதிகள் சீற்றம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் போர்க் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள 40 சிறிலங்காப் பொலிஸாரையும், ஓர் இராணுவ சிப்பாயையும் சமாதான நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு வந்துள்ள பௌத்த பிக்குகள் நேற்றுப் பார்வையிட்டனர். இச் சந்திப்பின் போது கைதிகளாகவுள்ள பொலிஸார், சிறிலங்கா அரசாங்கம் தம்மைக்கைவிட்டு விட்டதாகப் பௌத்த குருமார்களிடம் குற்றம் சாட்டினர்.

நேற்றுக் காலை 10.00 மணியில் இருந்து 11.30 மணி வரையிலான ஒன்றரை மணி நேரம் இச் சந்திப்பு இடம் பெற்றது. சுமார் இரண்டு வருடங்களாக விடுதலைப் புலிகளின் காவலிலுள்ள இப் போர்க்கைதிகள் தங்களை விடுவிக்க அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை எனப் பௌத்த பிக்குகளிடம் தெரிவித்தனர்.

மேலும், அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி, தம்மை விடுவிப்பதற்கான உருப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பௌத்த பிக்குகளிடம் கோரிக்கைவிடுத்தனர்.

இதேவேளை போர்க் கைதிகளைப் பரிமாறிக் கொள்ள விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்த வேளையிலும் அரசாங்கம் ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுக்கவில்லை. மேலும் தலைவர் பிரபாகரன்

(6ம் பக்கம் பார்க்க)

## அரசுப் படைகள் தாக்குதலுக்கு தயார்

### - கேணல் சரத்முனசிங்கா

(கொழும்பு)

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை மீண்டும் கைப்பற்ற பாதுகாப்புப் படைகள்திட்டங்களைத்தீட்டியுள்ளனர். ஆனால்எந்தநேரத்தில் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவிக்க முடியாது என்று கூட்டுப் படைகளின் தலைமைப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில் புலிகள் தற்போது பலவீனப்பட்டு உள்ளனர். பாதுகாப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தீவிரமோதல் ராணுவ முயற்சி முறியடிப்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை முதலிக்குளம் இராணுவ முகாமிலிருந்து பல நூற்றுக்கணக்கான சிறிலங்கா இராணுவத்தினர் தமிழ் மக்கள் வாழும் பகுதியை நோக்கி முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்

இவர்களை முன்னேற விடாது தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளைகும்புறுப்பிட்டி குச்சவெளி இராணுவ முகாம்களிலிருந்தும் சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேறி முன்னேறி வருகின்றனர். அங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தீவிர தேடுதல் ஒரேநாளில் 18 பேர் கைது

[கொழும்பு]

கொழும்பில் பொலிசார் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகவும், இதில் நேற்று முன்தினம் மட்டும் பதினெட்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. அம்பாறை, மகரகம பகுதிகளில் நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் கொடுத்த வாக்குமூலங்களைத் தொடர்ந்தும், கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் தேடுதல் நடவடிக்கைகளிலும் இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### அரச ஊழியர்

## சம்பள உயர்வு பற்றி அரசாங்கம் ஆலோசனை

(கொழும்பு)

அரசாங்கத் துறையில் கடமையாற்றும் சகலருக்கும் சம்பள உயர்வொன்றை வழங்க அரசாங்கம் ஆலோசிப்பதாகவும், இதற்கான நிலையை ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும்படி சம்பளச்சபை கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சரவை பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில் மூன்று மாத காலத்தினுள் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும்படி

(6 ஆம்பக்கம் பார்க்க)

## யாழ். செயலகத்திற்கு நேற்று பௌத்த பிக்குகள் விஜயம்

### பொது நிறுவனங்களையும் சந்தித்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருக்கும் பௌத்த நல்லெண்ண தூதுக்குழுவினர் நேற்று யாழ். அரசாங்க அதிபரையும் நல்லை ஆதீன தலைவரையும், மற்றும் பொது நிறுவனங்கள், அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடியதுடன் மகஜர்களையும் பெற்றுக்கொண்டனர்.

தூதுக் குழுவினர் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் யாழ் செயலகத்திற்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டனர். இவ் விஜயத்தின்போது யாழ் அரச அதிபர் ஏ. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு யாழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் பற்றி கேட்டறிந்தனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க உதவியுடன் சிங்களவர் ஆக்கிரமிப்பு

(மணலாறு)

மணலாறு கொக்கிளாய் பகுதியில் சிங்களமீனவர் துரிதகதியில் குடியேற்றப்பட்டு வருகின்றனர். ஒரு மாத காலத்தில் 1000 க்கு மேற்பட்ட சிங்கள மீனவகுடும்பங்கள் கொக்கிளாயிலும், கொக்குத்தொடுவாயைநோக்கிய கரையோரப் பிரதேசங்களிலும் குடியமர்த்தப்பட்டுள்ளன. அவர்களுக்கான தொழில் வசதிகளும், இருப்பிட வசதிகளும் சிறிலங்கா அரசால் செய்துகொடுக்கப்பட்டு வருகின்றன.

மகாவலித்திட்டங்களின் கீழ் மணலாறின் விவசாய நிலப் பரப்புகளில் சிங்களவரைக்குடியேற்றும் செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

## “புகை மண்டலம் விலகும் முன்பே அபயக் குரல்கள் எழுந்தன”

### -குண்டுவெடிப்பில் காயமடைந்த கடை உரிமையாளர்

(நமது நிருபர்)

சோனீர்கடையில் சிற்றுண்டி அருந்தியபின் உரிமையாளரிடம் நீர்வேண்டி அருந்திவிட்டு மறுதடவை நீர் அள்ள முற்பட்டபோது கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒன்று திடீரென மின்னி மறைந்ததும் பெரும் வெடிச்சத்தம் ஒன்று கேட்டது.

இதன்போது எழுந்த புகை மண்டலம் அடங்குவதற்குள் பல அபயக்குரல்கள்கேட்டன. சில வினாடிகளில் கரையை நோக்கி நான் ஓடிவந்தபோது இருபத்தைந்து அடி தூரம் வரையில் பல உடல்கள் சிதறித் துண்டுதுண்டாகக் கிடந்தன. தலைவேறு, கைவேறு, கால்கள், சதைத்துண்டுகள் குடல்கள் பிரிந்த நிலையிலுமாகக் காணப்பட்டன என கொம்படியின் தென்பகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும்

### — கல்விப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடைபெறாது தடைப்பட்டிருந்த 5-ம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சை நாளை 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைதிட்டமிட்டபடி நடைபெறவுள்ளது இப் பரீட்சை யாழ். மாவட்டத்தில் 102 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

[பா]

## குண்டுவெடிப்பில்பலியாகிய ஒன்பது பேரின் விபரம்

(நமது நிருபர்)

கொம்படி பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற குண்டு வெடிப்பின் போது பலியானவர்களில் ஒன்பதுபேரது பெயர் விபரங்கள் வருமாறு:

இராசையா தர்மேந்திரன் (25 ஆனையிறவு) தங்கராசா சசிகுமார் (17 தட்டுவான் கொட்டி) தங்கராசா ரஞ்சித்குமார் (15 தட்டுவான் கொட்டி) கதிரமலை தயாபரன் (20 தட்டுவான் கொட்டி) கந்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமானவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் 1992-05-22ஆம்திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவி : காவற் பொறுப்பாளர் / சமையற்காரர் (தாழ் தரம்)

சம்பள அளவுத் திட்டம் : ரூபா 2985 - மாதமொன்றுக்கு (நிலையானது)

தகைமைகள் :

(அ) எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) தளபாடங்கள், மட்பாண்டத்தொகுதி, வெட்டுக் கருவிகளின் தொகுதி. துணிகள் என்பவற்றைப் பேணுவதிலும், சூழவுள்ள தோட்டத்தைப் பராமரிப்பதிலும் அறிவுடையவராக இருத்தல்வேண்டும்.

(இ) மேலைத்தேய கீழைத்தேயஉணவு வகைகளைத் தயாரிப்பதில் அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) பல்வேறு வகையான உணவு வகைகளைத் தயாரிப்பதற்குப்பயன்படுத்தப்படும் பொருள்களைப்பற்றிய அறிவுடையவராக இருப்பதுடன் குறித்த எண்ணிக்கையான ஆட்களுக்கு ஒவ்வொரு வகையான உணவையும் தயாரிப்பதற்குத்தேவையானபொருள்களின் அளவு குறித்துப் பரிச்சயமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு : உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு : மேற்படி பதவிக்கான நியமனம் இரண்டு வருடங்களுக்கான ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்.

இப் பல்கலைக் கழகத்தின் தாபனக்கிளையின் உதவிப்பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும் தபால் மூலம் படிவங்களைப்பெறவிரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23 X 10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதிபன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், தெளிவில்லாமல் விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் ஆகியன நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-04-23 (சி/4317)

## கணக்காய்வாளர் தெரிவில் இனவிகிதம் புறக்கணிப்பு

(கொழும்பு)

1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கணக்காய்வாளர் தரம் இரண்டிற்கான போட்டிப் பரீட்சை நடைபெற்றது.

இப்பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய தற்போது மொத்தம் 107 பேர் கணக்காய்வாளர் தரம் இரண்டிற்கான நியமனங்களுக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்தெரிவில் இன விகிதாசாரம் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இத்தெரிவில் சிங்களவர்கள் 105 பேரும் தமிழர்கள் இருவர் மட்டுமே தெரிவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆதாரங்காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

தி. துஷியந்தன் என்பவரது பெயரிலான சாசோலை பொன்று தட்டாதெருச் சந்திக்கும் நல்லூருக்கும் இடைப்பட்ட இடத்தில் வைத்து சாம் வெல்வோல்நர் ஜோர்ஜ் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## 60-ம்நாள் நினைவஞ்சலி



தோற்றம் : 01 - 01 - 1919

மறைவு : 26 - 02 - 1992

### திருமதி கணபதி சின்னப்பிள்ளை


பாசமதை நீ வளர்த்தாய்; பக்குவமாய் எமைஅமைத்தாய்;
ஒற்றுமையின இலக்கணத்தை எங்களுக்கு ஊட்டிநின்றாய்;
காலம் பல உனக்குண்டு என நாங்கள் மகிழ்ந்திருக்க;
பாதியிலே எமைவிட்டு எதற்காக நீ மறைந்தாய்?

திரு. க. நடராசா [தலைவர், பனை அபிவிருத்திச்சபை] திருமதி. அ. இராசேந்திரம் [ஸ்கந்தபுரம்], க. செல்லத்துரை [ஸ்கந்தபுரம்]. க. வே. தங்கராசா (பிரதம இலிகிதர், விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு - யாழ். கச்சேரி), க. இராசதுரை (அதிபர் யாழ்/ நடேஸ்வராக் கல்லூரி) க. இராசேந்திரம் (ஆசிரியர், கிளி. / கனகாம்பிகைக் குளம் கனிஷ்ட வித்தியாலயம்], க. சிவராசா ஆசிரியர் யா / சென் ஜேம்ஸ் ம. வி]

26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(2500)

## 6-ம் மாத நினைவஞ்சலி
## 25-04-92

வீரப் பிறப்பு: 09 — 04 — 1975



வீரச் சாவு: 25 — 10 — 1991

### லெப். சித்தார்த்தன்
### (சிறிஸ்கந்தராசா சிறிதரன்)

தன் நலன் கருதா
அண்ணனின் பாதையிலே
வீர நடை போட்ட
இளம் வேங்கையே
உன் வீரச்சாவு
மணலாற்று அறப்போரிலே
நிகழ்ந்து விட்டது - சித்தார்த்தனே
உன் இலட்சியம் ஈடேற
பிரார்த்திக்கின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்
சிறிஸ்கந்தராசா குடும்பத்தினரும்
உறவினரும்

3/3 திருவையாறு
கிளிநொச்சி
(சி4322)

## புதிய உயர் கல்லூரி
## New College of High Studies
### ஆரியகுளம் சந்தி - யாழ்.

★ யாழ் பல்கலைக்கழகத்தினால் வெளிவாரிப் பட்டப் படிப்பிற்கு பதிவுசெய்துகொள்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான

| 1st INCOM | வணிக முதற்தேர்வு |
|---|---|
| G. A. Q. | கலை முதற்தேர்வு |

விண்ணப்ப முடிவுத் திகதி 06 - 06 - 1992
அன்றைய தினமே விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
விபரங்களை நேரில் பெற்றுக்கொள்ளவும்.

[சி/4320]

நிர்வாகி
S. அருள்நங்கை

## வானவில் அழைக்கிறது

கோடை வெப்பம் தணிந்திட,
குளிர்மையும் புத்துணர்வும் தந்திடும்
குளிர்களியும் உள்ளூர் பழ வகை
மென்பானங்களும்
உவகை தரும் சுவைமிக்க உள்ளூர்
சிற்றுண்டி வகைகளும்
உங்களுக்காகக் காத்திருக்கின்றன.
மங்கள விழாக் காலங்களுக்கான சிற்றுண்டி வகைகளை குறித்த தவணையில் தவறாது பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

வானவில் குளிர்பான சாலை,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி 4321)

## நினைவுகூருகின்றோம்...
## 1992-04-25

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வாழைத்தோட்டம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**மதன்** (அருள்நாயகம் தாயனந்தராசா - வாகரை, மட்டக்களப்பு)

**கரன்** (வெற்றிவேல்பிள்ளை தம்பிப்பிள்ளை - வெருகல், முட்டுச்சேனை, மூதூர்)

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட திருக்கோணமலை கிண்ணியாவைச் சேர்ந்த தமிழ்ப்பொது மகன்.

ஏழாலையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கட்டுவன்புலம் மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவன்.

1991 ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய-

**குமார்**

ஊர்காவற்றுறையில், சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய-

**கார்த்திக்** (ராஜேஸ்வரன் சந்திரகுமார் - சங்குவேலி தெற்கு, சண்டிலிப்பாய்)

**ராசிக்/ராபிக்** (நாகேஸ்வரக்குருக்கள், மதுசூதனன் - கந்தசாமி கோயிலடி இணுவில்)

**மனோஜ்** (அழகன் கருணாநிதி-ஓவாப்போம் தோட்டம், மலையகம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**
(சி/4319)

# சவுதியூடாக ஈராக்கிற்கு ஆயுதங்கள் அமெரி. அரசாங்கம் மீது விசாரணை

(வாஷிங்டன்)

அமெரிக்க அரசாங்கம்சவுதி அரேபியா ஊடாகஈராக்கிற்கு ஆயுதங்களை விநியோகித்ததா என்பது பற்றிவிசாரணை நடைபெறுமென செனேட் பெரும்பான்மைத் தலைவர் ஜோர்ஜ் மிட்செல் என், பி. ஸ். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.

முன்னதாக லொஸ்ஏஞ்லஸ் டைடம்ஸ் ஈராகிற்கும் இன்னும்சில நாடுகளெங்கும் ஆயுத தொழில்நுட்ப உதவிகளைப் பத்து வருடகாலத்துக்குவழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி றீகனும், இன்றையஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் உத்தரவிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இது பற்றியே அதாவது சட்ட விரோதமான செயல் நடைபெற்றதா என்பது பற்றி விசாரணை நடைபெறும் என்றும், ஜோர்ஜ் மிட்செல் தெரிவித்தார்.

சவூதி அரேபியாவூடாக சிரியாவுக்கோ பங்களாதேசுக்கோ ஆயுதங்கள் விநியோகிக்க உத்தரவிடவில்லையென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் அறிவித்த போதும் ஈராக் பற்றிய அவர் எதுவும் கூறவில்லை.

சென்ற வருட வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்கா ட்ரக் வண்டிகளைச் சிரியாவிற்கு கொடுத்துதவியது. அவைகளை இப்போது திருப்பிக் கேட்டுள்ளது என வெள்ளை மாளிகை அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

நீண்டகால ஈரான் யுத்தத்தில் ஈடுபட்டஈராக்கைக் கட்டியெழுப்பறீகன் புஷ் நிர்வாகங்கள் உதவியிருக்கலாம் எனக் கூறிய செனேட் பெரும்பான்மைக்கட்சித்தலைவர் ஜோர்ஜ் மிட்செல் -

அளிக்கப்பட்ட உதவி, சந்தர்ப்பங்கள் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிக்கை கிடைத்தன் பின்னரே தீர்மானிக்க முடியுமெனத் தெரிவித்தார்.

## தமிழக மீனவர்களால் ரான்ஸ் மீட்டர் கண்டுபிடிப்பு

(சென்னை)

கோடியாக்கரைக்கு அப்பால், கடலில் இருந்து இரண்டரை அடி நீளமுள்ள மின் அணுவானொலி டிரான்ஸ் மீட்டர் ஒன்று மீனவர் வலையில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் மீனவர் ஒருவர் வலையில் சிக்கிய இந்த ரான்ஸ்மீட்டர் தமிழக காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### யூகோஸ்லாவியாவுடன் உறவைமுறிக்க

## அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் தீவிர ஆலோசனை

(வாஷிங்டன்)

அமெரிக்காவும் ஐரோப்பிய சமூகநாடுகளும் யூகோஸ்லாவியாவுடன் ராஜதந்திர உறவை முறித்துக் கொள்வது பற்றி ஆலோசித்து வருகின்றன.

பிரிந்து சென்ற பொஸ்னியா-ஹெர்ஸகோவினாவில் இடம்பெறும் சேர்பிய ஆக்கிரமிப்பை ஆட்சேபிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளிநாட்டமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யூகோஸ்லாவியவுடன் பேச்சு நடத்த அமெரிக்கப் பிரதிநிதி ஒருவர் பெல்கிரேட் சென்ற சமயத்தில் சேர்பியப் படைகள் சரஜீவோ விமான நிலையத்தில் பீரங்கிகளால் தாக்கிய செயல் ஒருபகை நடவடிக்கை போன்றது என வெளிநாட்டமைச்சு வர்ணித்தது.

சேர்பியத் தலைமையும் ராணுவமும் அநாகரிகமான முறையில் நடந்து கொள்வதாகவும் அமெரிக்கா தெரிவித்தது.

ஸ்லோவேனியா, பொஸ்னியா ஹெர்ஸகோவினா ஆகிய பிரிந்து சென்ற மூன்று நாடுகளையும் அமெரிக்கா அங்கீகரித்துள்ளது. விரைவில் மாஸிடோனியாவையும் அது அங்கீகரிக்கும் நிலையில் அது உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

### ராமர்ஜென்மபூமி -பாபர்மசூதி

## ஆவணங்களை பரிசீலிக்க சட்டபூர்வ உரிமையில்லை

**- உ.பி முதல்வர் அறிவிப்பு**

(லக்னோ)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ தேசிய ஒருமைப்பாட்டுசபை இணைப்புக் குழுவிற்கோ ராமர் பிறந்த இடம் பாபர்மசூதி பிரச்சனை பற்றிய ஆவணங்களை சட்டபூர்வமானபரிசீலிக்கும் உரிமை கிடையாது என்று உத்தரப்பிரதேச முதலமைச்சர் கல்யாண்சிங் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநில சட்டசபையில் உரையாற்றிய கல்யாண்சிங் அயோத்தி பிரச்சினை தொடர்பாக மத்திய அரசு கேட்கும் எந்தவொரு கேள்விக்கும் பதில் தருவதில்லை என்ற தமது அரசாங்கத்தின் முடிவை மீண்டும் வலியுறுத்தினார்.

மத்திய அரசு இவ்வாறு கேள்வி கேட்டது சரிதானா என்று நேற்று முன்தினம மாநில சட்ட சபையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே இதனை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

மத்திய உள்துறை அமைச்சகம் கேட்ட ஐம்பத்தியெட்டு கேள்விகளில் முப்பத்தியிரண்டுக்கு தாம் ஏற்கனவே பதில் அளித்து விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

### ஆக்கிரமிப்பு பகுதியில்

## தேர்தல் நடத்துவதில் இஸ்ரேல் அரசு ஆர்வம்

(டெல்அவிவ்)

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் இருக்கும் பாலஸ்தீனப் பகுதியில் தேர்தலை நடத்த இஸ்ரேலும் முன்வந்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்த முடிவைத் திங்களன்று வாஷிங்டனில் நடைபெறவிருக்கும் ஐந்தாவது சுற்று மத்திய கிழக்கு அமைதி மாநாட்டில் இஸ்ரேல் அறிவிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

அவ்வாறுபாலஸ்தீனப் பகுதியில் தேர்தலொன்று நடந்தால், 1976 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இப் பகுதியில் நடைபெறும் முதல் தேர்தலாக இது இருக்கும். ஆனாலும் இஸ்ரேலின் முடிவை பாலஸ்தீனத்தரப்பு ஏற்றுக் கொள்ளுமா என்பது முடிவு செய்யப்படவில்லை.

## பஞ்சாப் அரசைப் புறக்கணிக்க தீவிரவாதிகள் கோரிக்கை

(டில்லி)

பஞ்சாப் மக்கள் மாநில அரசை முற்றாக புறக்கணிக்க வேண்டும் என்றும், பஞ்சாப்பிலுள்ள கிராம ஊராட்சி மன்ற உறுப்பினர் அனைவரும் ஜூன் முதல் திகதியளவில் இராஜினாமாச் செய்துவிட வேண்டும் என்றும் பஞ்சாப்மாநிலத்தில் தனிநாடு கோரிப் போராடும் சீக்கிய தீவிரவாதக் கட்சிகள் கேட்டுள்ளன.

மத்திய நிலைச் சரக்கிலுள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் பஞ்சாபில் கைது செய்யப்பட்டனர்.

பஞ்சாப்பில் தெற்குப் பகுதியிலுள்ள சீக்கியர் கோவில் ஒன்றில் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் கிராம ஊராட்சி அதிகாரிகள் அனைவரும்ஜூன் முதலாம் திகதியளவில் பதவிகளைஇராஜினாமாச் செய்து, கிராம மட்டத்தில் அமைக்கப் படவிருக்கும் கிருஷா பஞ்சாயத்து என்ற அமைப்பில் சேர வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதுபஞ்சாப் கடும்போக்கு அரசியல் கட்சிகள் இந்தக் கூட்டத்தை நடத்தினர்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற தேர்தலில் கலந்து கொள்ள மறுத்த ஆறு சீக்கிய கட்சிகள் பஞ்சாப் மக்கள் மாநில அரசை முற்றாகப் புறக்கணிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தார்.

விவசாயிகள் அரசிடம் பெற்ற கடன்களைத் திருப்பிக் கொடுக்க மறுக்க வேண்டும் என்று கூறியிருக்கும் இக் கட்சிகள் மே முதலாம் திகதி முதல் மே7 ஆம் திகதி வரை தானியங்கள் எதையும் சந்தைக்குக் கொண்டு போகக் கூடாது என்று விவசாயிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தியாவிலேயே தானியம் உற்பத்தி செய்யும் பிரதான மாநிலமான பஞ்சாப்விவசாயிகள் இந்த உத்தரவை ஏற்று நடந்தால் இந்தியப் பொருளாதாரம் முற்றாகப் பாதிக்கப்படும் என்று அவதானிகள் கூறுகின்றனர்.

சீக்கிய கோயிலில் நடந்த கூட்டத்தில் ஆறு கட்சிகளின் உயர் தலைவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. பெரும்பான்மையான கட்சியின் தலைவர்கள் பெப்ரவரியிலிருந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் அனைவரும் தேச விரோத நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

## சத்திய ஜித்ராய் காலமானார்

பிரபல திரைப்பட இயக்குனரும், திரைப்படதயாரிப்பாளருமான சத்திய ஜித்ராய் நேற்று முன்தினம் பிரபல கல்கத்தாவில் காலமானார்.

இவர் சுகவீனமுற்று கல்கத்தா மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்தார். மருத்துவமனையில் வைத்து இவருக்கு 'ஆஸ்கார்' விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பர்மிய ராணுவ தலைவர் பதவி விலகியுள்ளார்

(ரங்கூன்)

பர்மாவை ஆளும் ராணுவ சபையின் தலைவர் ஜெனரல் சோமோன் உடல் நலக் குறைவு காரணமாக பதவி விலகியுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

பர்மா வானொலியில் இத்தகவல் நேற்று முன் தினம் அறிவிக்கப்பட்டது. மருத்துவர்கள் ஜெனரல் சோமோன் விடுமுறையில் செல்லவேண்டும் என அறிவுறுத்தியமையினாலேயே இவர் பதவி விலகினார் என்றும் பர்மா வானொலி அறிவித்தது.

இவர் வகித்து வந்த சட்டம், ஒழுங்கு,மீட்புக் குழுவின் தலைமைப் பதவியை ஜெனரல் தார்ன்மின்சோ நேற்று முன் தினத்திலிருந்து ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜனநாயக நாடாக மாறும் போது

## ஐந்து உறுப்பினர் சபை; தெ.ஆ. ஜனாதிபதி கருத்து

(கேப்டவுண்)

தென் ஆபிரிக்கா ஒரு முழுமையான ஜனநாயக நாடாக மாறும் ஆட்சி மாற்றக் காலத்தில் அந்த நாட்டை ஆள்வதற்கு ஐந்து உறுப்பினர் சபையொன்றை ஏற்படுத்தலாம் என்று தென் ஆபிரிக்க ஜனாதிபதி டி.கிளார்க் யோசனை கூறியுள்ளார்.

கேப்டவுணில் பாராளுமன்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இந்த யோசனையை முன்வைத்தார். இந்த ஐந்து உறுப்பினர் சபையின் தலைமைப் பதவி உறுப்பினர்களுடையே மாறி மாறிவரும்என்றும் இந்ததலைவரே அரசின் அதிபராக இருப்பார் என்றும் டிகிளார்க் தெரிவித்தார்.

## அர. குழுக்களிடம் நஷ்டஈடு; சட்ட திருத்தம் தாக்கல்

(சென்னை)

தமிழகத்தில் அரசியல் கட்சிகள் அல்லது குழுக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம் ஊர்வலம் பேரணி போன்றவற்றில் பொதுச்சொத்துகளுக்கு ஏதும் சேதம் ஏற்பட்டால் அவற்றிற்கான பொறுப்பை சம்பந்தப்பட்ட கட்சி அல்லதுகுழுவே ஏற்க வேண்டுமெனவும் நட்டஈடு செலுத்த வேண்டுமெனவும் கோரும் சட்டத்திருத்தத்திற்கான முன்மொழிவு நேற்று தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

மாநில சட்டத்துறை அமைச்சர் இச் சட்ட முன்மொழிவைத் தாக்கல் செய்து பேசுகையில் மேலும் பொதுச் சொத்துகளுக்கு தீ வைக்கல் வெடி குண்டு வைத்து தகர்த்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவோருக்கு இரண்டு முதல் பத்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தால் அத்துடன் பேருந்துகளுக்கு" கல்லெறிதல் போன்ற வன்செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக ஆறு மாதம் முதல் ஐந்து ஆண்டு வரை சிறைத்தண்டனை வழங்கவும் சாலை பாலம் போன்றவற்றை சேதப்படுத்துதல் வழியைத் தடைசெய்தல் என்பனவற்றிகு ஓராண்டு முதல் ஐந்தாண்டு வரை சிறைத்தண்டனை வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

## புதுடில்லியில் குண்டு வெடிப்பு வெளிநாட்டவர் 10 பேர் காயம்

(டில்லி)

புது டில்லி ரயில் நிலையம் அருகே பகாட் பஞ்ச் பகுதியில் ஹோட்டல் ஒன்றில் இடம் பெற்ற குண்டு வெடிப்பினால் பதினொரு பேர் காயமுற்றனர் என்றும் இவர்களில் பத்துப் பேர் வெளிநாட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட நேரத்தில்வெடிக்கும் இவ்வெடிகுண்டு நேற்று முன்தினமிரவு உணவுவிடுதிக்குள் வெடித்தது என்றும் புதுடில்லி பொலிசார் தெரிவித்துள்ளனர். காயமுற்ற பதினொரு பேர்களில் மூன்று பேரின் நிலை கவலைக்குரியதாக இருக்கின்றதென்றும்.

இக்குண்டு வெடிப்பை பஞ்சாப் தீவிரவாதிகளே செய்திருப்பர் என்றும் புதுடில்லி பொலிசார் தெரிவித்துள்ளனர்

# யாழ். புகையிரத நிலையத்தில் அமைந்துள்ள தீவக மக்களின் இடம்பெயர்ந்தோர் முகாம்

இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தமது சொந்த மண்ணை விட்டு வெளியேறி யாழ். புகையிரத நிலைய முகாமில் தங்கியிருக்கும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மக்களைச் சந்திக்கும் பொருட்டு அங்கு நாம் ஒருதரிசிப்பை மேற்கொண்டு, அவர்களின் இரண்டு வருட அகதி வாழ்வின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டோம்.

மாலைப் பொழுது, புகையிரத நிலையத்தை எமது துவிச்சக்கரவண்டிகள சென்றடைந்தன நிலையத்தின் முன்தோற்றம், சிங்களக் காடையரின் குண்டு வீச்சிற்கு இலக்காகு முன்பு தான் இருந்த அழகைக் கொஞ்சமாவது எமக்குக் காட்ட வேண்டும் என்பது போல் தனது அழகிய இரட்டைத்தூண்களை நீட்டிக் கொண்டிருந்தது, மேல் மாடிக் கட்டடம் தனது அங்கங்களை இழந்து வானத்தை வெறித்துப் பார்ப்பது போல் காட்சியளித்தது. கனத்த நெஞ்சுடன் கண்களை அகட்டிக் கொண்டோம். சிறுவர்கள் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தனர். வயோதிபர்கள் கூட்டம் கூட்டமாக இருந்து தமது அனுபவங்களை மீட்டு ஆராயும் பணியில ஈடுபட்டிருந்தனர்

முகாமின் விபரங்களை அறியும் ஆவலில் முதலில், அதன் தலைவரை அணுகினோம். தறபோது முகாமின் தலைவராக திரு. தர்மலிங்கம் என்பவர் இருந்து வருகின்றார். 06-05-1991 ல் இருந்து இந்த நிலையம் இடம்பெயர்ந்த மக்களை அரவணைக்கும் ஆலயமாக இருந்து வருகிறது. இந்த ஒரு வருட காலத்திற்குள் நான்கு தலைவர்களை, இம்முகாம் மக்கள் சந்தித்து விட்டனர். ஏற்கனவே மூன்று தலைவர்கள் இருந்து சென்றுள்ளனர் எனினும் இம் முகாமில் இருப்பவர்களே அதன் நிர்வாக வண்டியையும் இழுத்துச் செல்வது சிறப்பிற்குரியது.

## முகாமின் விபரம்

தற்போது இங்கு 150 குடும்பங்கள் நிரந்தரமாகத் தங்கியுள்ளனர் இது தவிர சில குடும்பங்கள் வெளியில தங்கியுள்ள போதிலும் பதிவை இம் முகாமின் பட்டியலில் வைத்துக் கொண்டுள்ளனர். 150 குடும்பங்களும் 688 அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது. ஊர்காவற்றுறை, நாரந்தனை, சரவணை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இதன் உள்ளடக்கமாகும். ''அகதி'' வாழ்வை மேற்கொண்டதன் பின் இப் பூமியில பிறந்த குழந்தைகள் ''அகதி'' என்ற பதத்தைத் தாங்கி இரண்டு வருடங்களை அடைந்து விட்டனர். இதுதான் வாழ்க்கை என்ற சிந்தனையே அந்தச் சிறுசுகளின் பிஞ்சு உள்ளங்களில் வேரூன்றி இருக்கும் என்பதில் ஐயமேயில்லை. கர்ப்பவதிகள் 09, சிசுக்கள் 14, பாலூட்டும் தாய்மார், 13 பள்ளி முன்னிலைப் பிள்ளைகள் (1-5 வயதிற்குட்பட்டவர்கள்) 45 பேர் என நிலையப் பதிவேடுகள் பறைசாற்றின.

## முகாம் பராமரிப்பு

இந் நிலையத்தினை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் (SCF, U K) பராமரித்து வருகின்றனர், இவர்களின் அனுசரணையுடன் தான் முகாம் நிர்வாகம் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் (T O) வேண்டிய உதவிகளை வழங்கி வருவதாக மக்கள் தெரிவித்தனர்.

## உணவு மற்றும் சுகாதார வசதிகள்

உணவு வழங்கலைப் பொறுத்த வரையில் இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கென 'இ' அட்டை மூலம் வழங்கப்பட்டு வருகின்ற உலர்உணவுப் பொருட்களே இவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. விசேட கொடுப்பனவுகள் என்று கூறுவதற்கெதுவுமில்லை. இவர்களுக்கான உலர் உணவைவிநியோகிக்கும் பணியை யாழ்ப்பாணப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 28 ஆம் கிளை பொறுப்பேற்றிருக்கிறது உணவு விநியோகத்தில் தடங்கள்ஏற்படும் வேளையில் உணவுப் பஞ்சமும் ஏற்பட்டு விடுவதாகத் தாய்மார் பலர் கூறிக் கொண்டனர்.

சுகாதாரம் பேணல் என்ற நிலையில் யாழ் மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தினந்தோறும் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர், சுகாதாரத் தொண்டர் குழாமும் அமைக்கப்பட்டிருக்கிறது. சுகாதாரப் பரிசோதகர்கள், தாதியாளர், குடும்பநலசேவையாளர், தொண்டர்கள் ஆகியோரும் சுகாதாரம் பேணும் பணியில் ஈடுபட்டுக் கொண்டுள்ளனர். ஏனைய இடம்பெயர்ந்தோர் முகாம்களைவிட இங்கு மலகூடங்கள் அதிகம் என்றே கூற வேண்டும் நிரந்தர மலகூடம் 10 உம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால தற்காலிகமாக அமைத்துக் கொடுக்கப்பட்ட 6 உம் ஆக மொத்தம் 16 மலகூடம் 50 பேருக்கு ஒரு மலகூடம் என்ற அடிப்படையில உள்ளது.

## மக்களின் போசாக்கு

பொதுவாக அகதிமுகாம்களில் உள்ள மக்களில 95% மானோரின் போசாக்கு மந்த நிலையில் தான் உள்ளது என்பதை சுகாதார ஆய்வுகள், பதிவேடுகள் உறுதிப்படுத்தியுள்ளன. இதற்கு இம் முகாமும் விதிவிலக்கானதல்ல இந் நிலையில் இருந்து மக்களை ஓரளவாவது காப்பாற்ற பல திட்டங்கள் வகுக்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது இம் முயற்சி வெற்றியடைய வேண்டுமாயின் பொதுஸ்தாபனங்களும், மக்களும், பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் அந்த வகையில் இங்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் பால்மா கரைத்து வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள், ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகள் ஆகிய தரப்பினர்க்கு இப்பால் வழங்கப்பட்டு வருகிறது. சிறுவர் பாதுகாப்பு நிதியமும் மேற்கூறப்பட்ட தரப்பினர்க்கு ஜீவகாரத்தை வழங்கிவருகின்றனர். மந்த போசனையை மாற்றுவதற்கு பொதுஸ்தாபனங்கள் முயன்று வரும் வேளையில் இதனால் பாதிக்கப்பட்ட மக்களும் சுகாதார அறிவுரைகளைப் பின்பற்றுவது அவசியமாகின்றது குறைந்த செலவில் நிறைந்த சத்துள்ள உணவுப் பொருள்களை சாப்பாட்டில் சேர்ப்பது இன்றியமையாததாகும். குறிப்பாக கீரைக்குஞ்சி, மரக்கறிசூப் ஆகியவற்றை தயாரித்து பிள்ளைகளுக்கு வழங்குமாறு அறிவுரை கூறப்பட்டு வருவதாகவும இதில் சுகாதாரப் பகுதியும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து ஒவ்வொரு செவ்வாய்கிழமைகளிலும் சுகாதார அறிவுரைகளும் செய்முறைப் பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இவ்வறிவுரைகளுக்கு எந்தளவு தூரம் மக்கள தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர் என்று அறியும் ஆவலில் தாய்மார் பலரை அணுகி விசாரித்த போது அது வேண்டாத ஒன்றாகவே காணப்பட்டது அதாவது தமக்குள்ள மந்த போசனையை மக்கள் தம்முடையதாக இன்னும் கருதவில்லை என்பதையே இது சுட்டிக் காட்டுகின்றது சுகாதார அறிவுரைகளைவிட பழமை வாய்ந்த நம்பிக்கைகளுக்கே அவர்கள் முன்னுரிமை அளித்துள்ளதைக் காண முடிந்தது குழந்தைகளின் உடம்பில ''தேறுகயிறு'' என்று அழைக்கப்படும் நூல் கட்டப்பட்டிருந்ததை நம் அவதானித்தோம் இத் தேறுகயிறு ஏன் எப்போது கட்டப்பட்டது என்று வினவிய போது வயிற்றோட்டம் மற்றும் வருத்தங்கள் குழந்தைகளுக்கு வருகின்ற போது முதல் நடவடிக்கையாகத் 'தேறுகயிறு'' கட்டும் வேலையில் ஈடுபடுகின்றனர் இதனால் பணச் செலவையும் தாங்கி பிள்ளைக்கு வேண்டிய வைத்திய சிகிச்சையை அளிக்காது உயிராபத்தையும் ஏற்படுத்திக் கொள்கின்றனர் இது போன்ற அர்த்தமற்ற நம்பிக்கைகளை மக்கள் மனதிலிருந்து முதலில் களைந்து கொள்வதன் மூலம் மந்த போசனையின் அகோரிப்பை ஓரளவு தடுத்து நிறுத்தலாம் என்பது எமது நம்பிக்கை.

## தொழில் வருமானம்

தலைவரின் உதவியோடு முகாமைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தோம் புகையிரத நிலையத்தில் ஒரு பகுதியில் இருந்து மற்றைய பகுதிக்குச் செல்வதற்கென அமைக்கப்பட்டிருந்த கீழ்வழிப்பாதையின் மேல் கட்டில் இளைஞர்கள் பலர் கூடிக் கதைத்துக் கொண்டிருந்தனர் முகாமிற்குப் புதுமுகம் என்பதனால் என்னவோ எம்மீதும் தம் கடைக்கண்பார்வையை இடையிடையே செலுத்தினர் நாமும் அவர்களருகே சென்று கதைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு எம் பக்கமே முழுப் பார்வையையும் திருப்பிக் கொண்டோம் வேலைத்தளங்களில் வேலையை முடித்து விட்டு ஓய்வாக இருக்கிறார்கள் என்பதை உணர முடிந்தது செய்யும் தொழிலையும் அறிய முடிந்தது முகாமில் உள்ள இளைஞர்களில் பெரும்பாலானோர் தையல் வேலைகளிலே ஈடுபட்டுள்ளனர் அத்தோடு அவர்களுக்கு விருப்பமான தொழிலாகவும் இது காணப்படுகின்றது இவர்களின் விருப்பம் புதியவர்களுக்கும் இத்துறையில் பயிற்சி பெறும் ஆவலைத் தூண்டி அதில இழுத்துச் செல்கிறது எனலாம்.

அவ்விளைஞர் கூட்டத்தில் இருந்த ஒருவரைப் பிரபல்யமான தையல்காரரர் என அறிமுகப்படுத்தினார்கள் பெயர் குறிப்பிட விரும்பாத அவர் நாள் ஒன்றுக்கு ஐந்து ரவுசர்களைத் தைப்பதாகத் தெரிவித்தார் தையல் வேலை தவிர வாளி தயாரிக்கும் வேலையிலும் முகாமிலும் வெளியிடங்களிலும் ஈடுபட்டுள்ளனர். இதில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை ஈடுபடுகின்றனர். மிகவும் நுட்பமாகவும் விரைவாகவும் வாளிகளைத் தயாரிக்கின்றனர் அவர்கள் தயாரித்த வாளிகளையும் எமக்குக் காட்டினார்கள். அதில் இருந்த இளைஞர் ஒருவர் தாம் ஊரில் இருந்த போது எதுவித பொறுப்புக்களையும் உணராதவராக இருந்ததாகவும் இடம் பெயர்ந்து வந்த பின்பு தான் குடும்பப் பொறுப்புக்களை உணர்ந்து கொண்டு, வேலை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். இது தவிர வேறு சில தொழில்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதை அறியமுடிந்தது.

எனினும் ஒரேவித தொழிலை மேற்கொண்டிருந்தவர்கள் இங்கு வேலையற்றிருப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாக, விவசாயம், மீன்பிடி. தச்சுவேலை, மேசன் வேலை ஆகியவற்றில் ஈடுபட்டவர்களே வேறு வேலைகளைச் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

## ஏனைய வசதிகள்

இம் முகாமில் உள்ள சிறுபிள்ளைகளின் நலன் கருதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஒரு பாலர் பாடசாலையும் அமைக்கப்பட்டுள்ளது இப்பாடசாலைக்குப் பொறுப்பாக இருக்கும் ஆசிரியை திருமதி சாந்தினி அவர்களையும் சந்தித்து உரையாடினோம். இங்கு மொத்தம் 36 பிள்ளைகள் கல்வி பயின்று கொண்டிருக்கின்றனர். இது தவிர வாசிகசாலையும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. விடுமுறைதினங்களில் பட்டிமன்றம், கவியரங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் வைப்பதாகவும் தெரிவித்தனர்.

இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தமது சொந்த மண்ணை இழந்துள்ள போதிலும் பி.பி. சி நிருபர்கள் கூறியது போல். இவர்கள் தம்மிடம் உள்ள வளங்களைக் கொண்டு தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ்க்கைத் தோணியை இழுத்துச் செல்கின்றனர் அங்கிருந்து நாம் விடைபெறும் போது அவர்கள் எம்மிடம் கேட்டது எம்போது நாங்கள் ஊருக்குப் போவோம் என்பது தான். இக் கேள்வி சொந்த மண் மீது அவர்கள் கொண்டுள்ள பற்றினை எமக்குக் கோடிட்டுக் காட்டியது.

**ஒரு மாணவனின் நேரடி அவதானிப்பு**

**ந. விஜயசுந்தரம்**


**ஸ்ரீதர் திரையரங்கில்**

தினசரி மாலை 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4-00, 6-00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

**Freedom Forces**

(இந்தோனேசிய விடுதலைப் படை)

(சி/4314)



**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

**பசுபதிப்பிள்ளை பொன்னம்மா**
**(லீலா)**

தோற்றம்: 17. 09. 1955

மறைவு: 26. 03. 1992

அனலைதீவை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரும் கொழும்பு மருத்துவமனையில் 26-03-92 இல் இறைபதம் சேர்ந்த பசுபதிப்பிள்ளை பொன்னம்மா (லீலா) அவர்களின் அந்தியேட்டி கிரியை 23-04-92 (வியாழன்) இரணைமடு கனகாம்பிகை குளத்திலும் வீட்டுக்கிரியை 25-04-92 (இன்று) இல 348 ஸ்கந்தபுரம் இல்லத்திலும் நடைபெறவுள்ளது

உற்றார், உறவினர் அனைவரும் இதனை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்னாரின் சோக நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் ஆறுதல் தந்தவர்களுக்கும் எமது இதய நன்றி

உன்னை என்றும் மறவாத
(கணவன்) சி பசுபதிப்பிள்ளை
(பிள்ளைகள்) நிந்துஷா, நிரூலன், பவித்ரா

சி. பசுபதிப்பிள்ளை,
348, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

(சி-4323)

## சிந்தனைக்கு

நியாயமாக மனிதர் செய்யக்கூடியது, அனைத்தையும் அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவீனம்.

-றிச்சர்ட் பேட்லி

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 25-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# ஏமாற்றம் தரும் தீர்வுத் திட்டம்

சமாதானத்திற்கான நல்லெண்ண முயற்சியை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ள பௌத்த பிக்குகள் தூதுக்குழு, நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுடன் நடத்திய முதல் கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது, இனப்பிரச்சினைத் தீர்விற்கென ஒன்பது அம்சங்கள் அடங்கிய தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்தது.

மிகவும் சுருக்கமானதான, அதேவேளை தெளிவற்றதான இத்தீர்வுத் திட்டம் எதுவித முன்னேற்றமற்றதும் ஆகும். தமிழரின் இதுவரைகால கோரிக்கைகளையும், இழப்புக்களையும் கவனத்திற் கொள்ளாததுமான இத்தீர்வுத்திட்டம், தமிழ்மக்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது என்றும் கூறலாம்.

பௌத்த பிக்குகள் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தில், முதலில் குறிப்பிடக்கூடியதாக உள்ளது அவர்கள் தீர்வுத்திட்டத்தில் முன்னெடுத்துள்ள பிரச்சினைகளை விட இனப்பிரச்சினையில் முன்னெடுக்காத பிரச்சினைகள் அதிகம் என்பதாகும். இத் தீர்வுத்திட்டத்தில், முக்கியமான அம்சங்களான தமிழர் தாயகம், தமிழர் சுயநிர்ணய உரிமை, தமிழர் தேசியம் எவையும் அங்கீகரிக்கப்படவில்லை. அத்தோடு ஆட்சி அமைப்பு முறை, அதிகாரப் பரவலாக்கல், காணிப் பகிர்வு உட்பட முக்கியமான விடயங்கள் எவை குறித்தும் எதுவித குறிப்புகளும் இல்லை. இதில் அதிகாரப் பரவலாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற ஒரு குறிப்பு இருப்பினும், அதன் எல்லைகள் பற்றி எதுவித அறிவுறுத்தல்களும் இல்லை.

இதேவேளை, தீர்வுத்திட்டத்தில் குறிப்பிடப்படாத அம்சங்களைச் சுட்டிக்காட்டுவதை விட குறிப்பிட்ட அம்சங்கள் குறித்து விமரிசிப்பதே பொருத்தப்பாடானதாகும் இத்தீர்வுத் திட்டத்தில் தமிழர் தாயகம் பற்றி எந்தவித குறிப்பும் இடம் பெறவில்லை ஆனாலும், தமிழர் தாயகம் என்பது திட்டவட்டமாக மறுக்கப்பட்டுள்ளது. "25,332 சதுரமைல் பரப்பைக் கொண்ட இலங்கைத்தீவு இங்குவாழும் சகல பிரஜைகளுக்குமான தாயகமாகக் கொள்ளப்படவேண்டும்" எனத்தீர்வுத் திட்டத்தில் சொல்லப்படுவதானது, தமிழர் தாயகத்தை மறுப்பதுமட்டுமல்ல, சிங்களப் பேரினவாதிகளின் தம்மதீப் கோட்பாட்டையே மீண்டும் மறைமுகமாக வலியுறுத்துவது போல் உள்ளது.

அதாவது இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக நடத்தப்பட்ட சகல பேச்சுவார்த்தையின் போதும், தமிழர் தாயகம் என்பது குறித்து தமிழர் தரப்பினரால் வற்புறுத்தப்பட்டு வந்தது. 1983 ஆம் ஆண்டிற்கு பின்னர் இனப்பிரச்சினை தொடர்பாக நடந்த முக்கிய பேச்சுவார்த்தைகளான திம்பு பேச்சுக்களில் இருந்து, இந்தியா-சிறிலங்கா சமாதான உடன்படிக்கை வரை தமிழர் தாயகம் என்பது முக்கிய விடயமாக இருந்தது. இப்பேச்சுக்கள் யாவும், தோல்வியில் முடிவுறவும், தொடர்ந்து யுத்தங்கள் நீடிப்பதற்கும் இதுவே பிரதானமான காரணமாயும் இருந்தது. ஆனால் இத்தமிழரின் தாயகம் குறித்த விவகாரம் ஒவ்வொரு பேச்சுக்களின் போதும் சற்று முன்னேற்றம் கண்டுமுள்ளது.

ஆனால், தற்பொழுது பௌத்த பிக்குகள் வைத்துள்ள சமாதானத் தீர்வுத்திட்டமானது இவற்றையெல்லாம் நாசுக்காக தவிர்த்து, தமிழர் தாயகம் என்ற விடயத்தையே புறந்தள்ளியுள்ளது. அத்தோடு, வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து மூன்றுவருடங்களின் பின் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு மூலம் இணைப்பு குறித்து தீர்மானிக்கலாம் எனவும் தெரிவிக்கின்றது. அதாவது ஏனைய விடயங்கள் யாவற்றிலும் தெளிவின்மையும், குறைபாடு கொண்டுள்ள இத்தீர்வுத் திட்டம் தமிழர் தாயகத்தையும், அது இணைந்திருப்பதையும் தெளிவாக மறுக்கின்றது.

இது ஒன்றே, இத்தீர்வுத்திட்டம், தமிழரின் தேசிய அபிலாசைகள் எதையும் பிரதிபலிக்கவில்லை என்பதை உணர்த்தப் போதுமானதாகும் இத்தீர்வுத்திட்டம், இதுவரை கோரிவந்த தமிழர் தாயகம் தமிழர் சுயநிர்ணய உரிமை, தமிழர் தேசியம் என்பனவற்றை அடியோடு மறுப்பதாக உள்ளது. சிங்களப் பேரினவாத சக்திகளில் இருந்து தம்மை வேறுபடுத்தி முற்போக்கான தீர்வுத்திட்டம் ஒன்றை சமர்ப்பிப்பதாக எண்ணும் யாழ். வந்த பிக்குகளின் தீர்வுத்திட்டமே இவ்வாறானதென்றால், இனப்பிரச்சினையை சமாதான ரீதியில் தீர்த்துவைக்க சிங்களவர்கள் இன்னும் நீண்டதூரம் வர வேண்டும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

# மாபெரும் தமிழிசை விழா நல்லூரில் அடுத்தவாரம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் மிகப்பிரமாண்டமான அளவில் தமிழீழத்தின் நூற்றுக்கணக்கான இசைக்கலைஞர்களை ஒன்றிணைத்து மாபெரும் தமிழிசை விழா நிகழ்ச்சியை நடாத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருவதாக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; இந் நிகழ்ச்சிகள் நல்லூர் வடக்கு வீதியில் எதிர்வரும் 2-5-92 தொடக்கம் 6-5-92 வரை ஐந்து நாட்கள் தினமும் மாலை 5-00 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

இசைக்கலைஞர்கள், இசைத்துறை அறிஞர்கள் எனப்பலர் பங்குபற்றும் இவ்விழாவில் புகழ்வாய்ந்த பதினாறு பாடகர்கள் பங்குபற்ற உள்ளனர் இவர்களுக்கு அணிசெய் வாத்திய கலைஞர்களாக நாற்பது கலைஞர்கள் பங்குபற்ற உள்ளனர்.

தலைசிறந்த நாதஸ்வரக் கலைஞர்களின் நாதஸ்வரக் கச்சேரிகளுடன் வயலின் இசைக் கச்சேரிகள், சிஞ்சிற் கச்சேரிகள் என்பனவும் இடம் பெறுகின்றன.

தமிழீழத்தின் சிறப்புமிக்க இசை விற்பன்னர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இவ்விழாவை அணிசெய்கிறார்கள். இசைத்துறை சார்ந்த அறிஞர்கள் இத்தமிழிசை விழா அரங்கில் கலந்து கொண்டு இசைபற்றிக் கருத்துரையாற்றுவார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்கள்.

போராட்டத்தின் மீது பற்றுக் கொள்ள வைக்கும் தமிழிசை விழாவாகவும் தமிழுக்கும் இசைக்கும் ஒரு பெரு விழாவாகவும் இது அமையப் பெறும்.

அனைவரையும் திரண்டு வருக என விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் அழைப்பு விடுத்திருக்கிறது.

## விஞ்ஞான கற்கைநெறி ஆரம்பம்

(சாவகச்சேரி)

யா/சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் க. பொ. த. (உ/த) விஞ்ஞான பாடகற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

அண்மையின் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய ஆசிரியர்களினால் பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், ஆகிய பாடங்களுக்கான கற்கை நெறிகளே ஆரம்பிக்கப்பட உள்ளன மேலும் இவ்வகுப்புக்களுக்கேற்ற ஆய்வு கூட வசதிகள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வகுப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் காரியாலயத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் என அக்கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார்.

## விசேட கூட்டம்

கோட்ட ரீதியாக சகல அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான கூட்டங்கள் நடைபெறவுள்ளதாக கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இன்று 25-ம்திகதி பி.ப. 4.00 மணிக்கு வடமராட்சிக்கல்விக் கோட்ட உடுப்பிட்டி, நெல்லியடி, வல்வெட்டித்துறை, கரவெட்டி, கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்களை நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திற்கும்,

இன்று 25 ஆம்திகதி மு.ப.10.00 மணிக்கு வடடுக்கோட்டை, சுழிபுரம், பண்டத்தரிப்பு, இளவாலை, காரைநகர் கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்களை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்திற்கும்,

நாளை 26 ஆம்திகதி பி ப 4.00 மணிக்கு அளவெட்டி, தெல்லிப்பளை, அம்பனை, காங்கேசன்துறை, மல்லாகம் கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்களை யாழ் அருணோதயா கல்லூரி மண்டபத்திற்கும்,

27 ஆம் திகதி பி ப. 4.00 மணிக்கு வடமராட்சிக் கல்விக் கோட்ட புலோலி பருத்தித்துறை, நாகர் கோவில், உடுத்துறை கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்களை யாழ். வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கும்,

27 ஆம் திகதி பி. ப. 3. 30 மணிக்கு மருதனார்மடக் கல்விக் கோட்ட நவாலி, மானிப்பாய், கொத்தணி அதிபர்கள் ஆசிரியர்களை யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்திற்கும், உரும்பிராய், உடுவில், வசாவிளான், ஏழாலை, சுன்னாகம் கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்களை இணுவில் அமெரிக்கன் மிசன் பாடசாலைக்கும், அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி. கோப்பாய் கொத்தணி அதிபர்கள் ஆசிரியர்களை யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்திற்கும் வருகை தரும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஒன்றியம் சம்பள உயர்வு கோரித் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவுள்ளது.

தமது ஒன்றியத்தின் நியாயமான கோரிக்கைகளை அரசு ஏற்காவிடில் தாம் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப் போவதாக ஒன்றியத்தின் தலைவர் பேராசிரியர் நளின் டி சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் பிரதிநிதிகளைத் தவிர ஒன்பது பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளும் கொழும்பில் கூடி இது தொடர்பாக ஒரு தீர்மானம் எடுத்துள்ளனர். யாழ் .பல்கலை ஆசிரியர்கள் சங்கத்திற்குக் கூட்ட அழைப்பு அனுப்பப்படவில்லை.

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்குச்சம்பளஉயர்வு வழங்குவதன்முன் 60 விகிதம் இடைக்காலப் படிவழங்க நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஒன்றியம் கேட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஒன்றியம் 100 விகித சம்பள உயர்வு கோருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# உணவுமுத்திரைபெறுவோர் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

உணவுமுத்திரை பெறுவோரின் தொகை 14 இலட்சத்து 1387 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வரட்சிகாரணமாக மேலும் ஒருஇலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து அறுநூற்றி இருபது பேர் உணவுமுத்திரையை பெற தகுதியுடையவர்களாக கணிக்கப்பட்டுள்ளனராம்.

7ஆம் தொடர் உணவுமுத்திரை கையளிப்பு ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெறுகிறது.

ஏற்கனவே சுமார் 12 இலட்சத்து 68 ஆயிரத்து 767 பேருக்கு அமைச்சு உணவு முத்திரைகளை வழங்கிவருகிறது.

# தனியார் துறை ஊழியர் வேலை நிறுத்த முஸ்தீபு

(கொழும்பு)

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தைச் (சி எம் யு) சேர்ந்த தனியார் துறை ஊழியர்கள் வரும் 29 - ஆம் திகதி பொது வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

அரசாங்கத்தின் தனியார் மயப்படுத்தல் கொள்கை ஜனநாயக உரிமைகளை மறுக்கும் அவசரகாலச் சட்டத்தை நீடித்தல், தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப் பட்டமை' வாழ்க்கைச் செலவினங்களின் அதிகரிப்பு ஆகியவற்றைக் கண்டித்தே பொது வேலை நிறுத்தம் நடைபெறவுள்ளது.

27, 28 ஆம் திகதிகளில் தமது தொழில் ஸ்தாபனங்களுக்கு முன்பாக மறியல் போராட்டம் முடிவு செய்துள்ள ஊழியர்கள் 29- ஆம் திகதி பொது வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

## வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு

# தோட்ட இளைஞர்களிடம் பணம் பறிப்பு

(பண்டாரவளை)

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக கூறிக் கொண்டு தோட்டப்புற இளைஞர்களையும் யுவதிகளையும் திட்டமிட்டுப் பணம் பறிக்கும் பேர்வழிகள் பற்றி இப்போது செய்திகள் வெளிவருகின்றன.

தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதாகக் கூறிக் கொண்டு தொழிலாளர்களிடம் பிள்ளைகளிடம் பணத்தை கறந்து விடுகின்றனர் மாதக்கணக்கு வருடக்கணக்கு பேயும் வேலை வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை.

இது விடயத்தில் அவர்களிடம் மாட்டிக் கொண்டு அவதிப்படுகின்றவர்கள் தொழிற் சங்க காரியாலயங்கள் அமைச்சர்கள் போன்றவர்களிடம் முறையிட்டு எதுவித பயனும் கிடைக்கவில்லையென விசனம் தெரிவிக்கின்றனர்.

# துயருறும் மக்கள் எழுச்சியாக மேதினம் அமையட்டும்

சிறிலங்கா அரசின் இனவாதகொள்கையையும், திட்டமிட்ட பொருளாதாரத் தடைகளால் எமது மக்கள் படும் துயரத்தையும் இவ்வருட மே தினத்தில் கலந்துகொண்டு வெளிப்படுத்த வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு பொறுப்பாளர் பரா அவர்கள் தெரிவித்துள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி மற்றும் சுகாதாரத திணைக்கள ஊழியர்களுக்கான மே தின ஏற்பாட்டுக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று பல நெருக்கடிகள் மத்தியில் இம் மே தினத்தைக் கொண்டாட நாம் தீர்மானித்துள்ளோம். சென்ற வருடம் போன்று இவ்வருடமும் எமது மக்கள் அணிதிரண்டு இம் மே தின ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ள வேண்டும்.

பொதுஸ்தாபனங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் அனைத்தும் ஒன்று திரண்டு இம் மேதின விழாவில் கலந்து கொள்ளவேண்டும்.

திணைக்களங்களில் வேலை செய்யும் நீங்கள் இப்பொருளாதாரத் தடைகளால் எவ்வளவு தூரம் பாதிப்படைகிறீர்கள் என்பதை நாமறிவோம். இந் நிலையிலும் இப் போராட்டத்தில் நாம் வெல்ல வேண்டும் என்பதில் நீங்கள் அக்கறையாக இருந்தாலும் முழுமையாக உங்கள் பங்களிப்பு அவசியமாகும்,

இந்த அரசு ஒட்டுமொத்தமாக தமிழ்மக்களையே முற்றாகப் புறக்கணித்து இனவாதக் கொள்கையை மேற் கொண்டு வருகிறது அத்துடன் இராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது. இவர்களுடன் இணைந்து சில தமிழ்த் துரோகக் கும்பல்களும் செயற்படுகின்றன. மக்களின் தேசிய உணர்வை மதியாது இத்தேச விரோதக் கும்பல்கள் எதிரியுடன் இணைந்து பல அழிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர் என கூறினார்.

எனவே இவ்வருட மே தின ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் நீங்கள் முழுமையாகக் கலந்து கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# மக்கள் எழுச்சிக்கு மேநாள் அழைக்கிறது

தொழிற் சங்கங்கள் தமது உரிமைகளுக்கு மட்டுமன்றி அரசியல் சமுதாய இயங்குதலில் இருந்து அந்நியப்படாது எமது தேசிய உணர்வுகளையும் பிரதிபலிக்கும் செயற்பாடுகளில் இறங்குவதற்கு 'மே' நாள் வழிவகுக்கின்றது இம் முறை 'மே' நாள் பேரெழுச்சியாகப் புத்துணர்வோடு முன்னெடுக்கப் படுகிறது.

துறைசார்ந்த தொழிற் சங்கங்கள் தமது யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டு சிறிலங்காத் தொழிற்சங்கங்களின் தலைமைத்துவத்தைத் தூக்கியெறிந்துவிட்டு தமது தேசிய உணர்வை வெளிக் கொணர்கின்றன. தமிழீழத் தொழிலாளர்கள் பேரினவாதத்தால் பாதிப்புக்கு உள்ளாகி நடைப்பிணங்களாய் வாழ வழியற்று அலைகின்ற நிலைப்பாட்டிலிருந்து உறுதியுடன் ஆர்த்தெழுவதை இம் முறை 'மே' நாளில் காணக் கூடியதாக இருக்கும். இதன் வெளிப்பாடாக எமது பிரதேசத்தில் சகல இடங்களிலும் சுவரொட்டிகளும், பதாதைகளும் மக்களை அணிதிரளுமாறு அழைக்கின்றன.

ஆற்றல்மிகுந்த உழைப்பாளிகள் பல இடங்களில் பெரும் பந்தல்களை நிர்மாணித்து வருவதை அவதானிக்க் கூடியதாக உள்ளது. பெருந்திரளான மக்கள் இம்முறை எழுச்சிப் பேணியில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப் படுகிறது

## சுட்டெண்கள் இன்று வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு நடராஜா வித்தியாலய 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது சுட்டெண்கள் யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை அதே பாடசாலையில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### திருமறைக் கலாமன்ற

## முத்தமிழ் விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்

(குருநகர்)

யாழ். திருமறைக் கலா மன்றம் எடுக்கும் முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று (25-4-92) மாலை ஐந்து மணிக்கு ஆரம்பமாகும்

தவத்திரு தனிநாயக அடிகள் அரங்கில் ஆரம்பிக்கும் இன்றைய நிகழ்ச்சிகளுக்கு யாழ். உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி வேலாயுதம் தலைமை வகிப்பார்.

புலவர் ஈழத்து சிவானந்தன், திரு.ஆர் எஸ். நடராசா ஆகியோர் சிறப்புரை வழங்குவர்.

திரு. ஆ. வை. நாகராஜன் தலைமையில் தமிழுக்கு காப்பியம் செய்தவன் கம்பனா? இளங்கோவா? என்னும் பட்டிமன்றத்தில் திருவாளர்கள் எஸ். தங்கராசா, தம்பையா நாகலிங்கம். எஸ். எஸ், பி. அமலதாஸ். எஸ்.சந்திரமௌலீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சங்கீத கலாவித்தகு செல்வி தி துளசி மனோகரியின் புல்லாங்குழல் இசையைத் தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு நடைபெறும்;

ஈழநல்லூர் நாதஸ்வர வித்துவான் பி.எஸ் பிச்சையப்பா அவர்களை திருமறைக் கலா மன்ற இயக்குநர் பேராசிரியர் வண.நீ.மரியசேவியர் அடிகள் கௌரவித்து வைப்பார்.

இசைத்தென்றல் எம். யேசுதாஸன் வழங்கும் இராகதீபம் இசைத்தமிழ் அரங்கை அலங்கரிக்கும்.

ஆடல் காண்போம் நிருத்தியாஞ்சலியை திரு. பா. வின்சன்ற் குழுவினர் வழங்குவதுடன் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நிறைவு அடையும்.

(21)

### பத்திரிகை ஆசிரியருக்கு எதிராக

## தமிழக சட்டசபை உத்தரவு நீதி மன்றத்தால் நிறுத்தம்

இயஸ்ரேட்டட் வீகிலி ஒப் இன்டியாவின்முன்னாள் செய்தியாளர் கே பி. சுனில் தமிழ் நாடு சட்டப் பேரவையின் உரிமையை மீறினார் என்றுகோரி அவருக்கு எதிராகச் சட்டப் பேரவைச் சபாநாயகர் சேடபபட்டி முத்தையா பிறப்பித்த கைதுஉத்தரவை மூன்று நீதியரசர்களைக் கொண்ட உச்சநீதி மன்றுநிறுத்தி வைத்துள்ளது

சுனில் சமர்ப்பித்த மனுக் குறித்து தமிழ்நாடு அரசு சென்னை நகரப் பொலிஸ் கமிஷனர் மற்றும் சட்டப் பேரவைச் செயலாளருக்கும் இந்த நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

## புகை

யில் நேற்றுமுன்தினம் நண்பகல் அளவில் நடைபெற்ற குண்டு வெடிப்பின்போது மயிரிழையில் காயங்களுடன் உயிர் தப்பிய செ. வேல்முருகன் எமது நிருபருக்குத் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த இவர் இங்கு சர்பத்கடை நடாத்திவருகிறார். இவர் தொடர்ந்து விபரிக்கையில் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து இப்பகுதிக்கு விரைந்து வந்த இளைஞர்கள் படுகாயமடைந்தநிலையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த பலரை வள்ளங்களில் தூக்கி ஏற்றி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தார்கள் இதன் போது நானும் வள்ளம் ஒன்றில் ஏறிவந்தேன். வள்ளத்திற்குள் அனைவரும்வேதனையில் துடிதுடித்துக்கொண்டிருந்தார்கள்.

கடலில் வந்துகொண்டிருக்கும் போதே இடைநடுவில் இளைஞர் ஒருவர் பரிதாப மரணத்தைத் தழுவிக்கொண்டார். மூன்றுமணி நேரத்திற்கு மேலாக பலத்த சிரமத்தின் மத்தியில் வடக்குக் கரையை வந்தடைந்ததும் அங்கிருந்து வாகனங்களில் நாம் அவசர அவசரமாக ஏற்றப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டோம் என்றார்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் பெருமளவில் யார் நின்றார்கள் எனக் கேட்டபோது அங்கு கூடுதலாக வள்ளம் ஓட்டும் பணியில் ஈடுபடும் இளைஞர்களே ஒய்வெடுப்பர் எனவும் சுமார் அறுபது பேர் வரையில் சம்பவ இடத்தில் நின்றிருப்பார். இவர்களில் பத்துப் பேர் வரை இறந்து கிடந்ததை நான் அவதானித்தேன். பதினைந்து இருபது பேர்வரையில் காயமடைந்திருக்கலாம், ஏனையோர் தப்பியோடியிருக்கலாம் என கருதுகிறேன் என்றார்.

சேதவிபரங்கள் பற்றிக் கேட்ட போது எனது கடை உட்பட மூன்று கடைகளும் சேதமடைந்துவிட்டன. இனிப்பு வகைகள், தின்பண்டங்கள், தளபாடங்கள், ரம்ளர்கள் அனைத்தும் கடற்கரை வரை சிதறிக் காணப்பட்டன என்றார்.

இக் குண்டு வெடிப்பின் போது மறக்கமுடியாத முக்கியமான விடயம் ஏதாவது உண்டா எனக் கேட்டபோது சம்பவம் நடப்பதற்கு சில நிமிடங்களுக் முன் மூன்று சிறுவர்கள் என்னிடம் வந்து அருந்த நீர் கேட்டனர். நான் அவர்களுக்கு நீர் கொடுத்து விட்டு சிற்றுண்டி அருந்த அருகிலிருந்த கடைக்கு சென்று விட்டேன். திரும்பி ஓடி வரும் போது என் கடையின்முன்பாகவே அம் மூன்று சிறுவர்களும் பல துண்டங்களாகச் சிதறிக் கிடந்தனர் எனக் கண்கலங்க நா தள தளக்கக் கூறினார்.(ச)

## கிழக்கில்

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு வரையான 25 மைல் தூரத்தில் 10 சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வாகனங்கள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. இந்த பாதையில் பிரயாணம் செய்ய நாலு மணி நேரத்திற்குமேல் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்.

இச்சமாதான தூதுக் குழுவினருக்கு அரசஅதிபர்யாழ் மக்கள் படும் துன்பங்களைஎடுத்துரைத்ததுடன் மகஜர்ஒன்றையும் கையளித்தார் இம்மகஜரில்யாழ்ப்பாணத்தில்உள்ள அகதிகள் பிரச்சினை, மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை, கட்டிடப் பகுதி ஊழியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை யாழ்ப்பாணத்திற்கு தேவையான அத்தியாவசிய மருந்துகள் இன்மை, கல்வி சம்பந்தமான பிரச்சினைகள் அடங்கிஇருந்தன

இம் மகஜரை கையேற்ற தூதுக் குழுவினர் தாம் கொழும்பு சென்றதும் கையளிக்கப் பட்ட மகஜரில் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதி, பொறுப்பான அமைச்சு அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க தம்மால் முடிந்தவரை முயற்சிகளை செய்வதாக உறுதி அளித்தனர்.

இக் கூட்டத்தில் இந்துமகா சபை வங்கி ஊழியர்கள் தரப்பு பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தம்முடைய பிரச்சினைகளை இக் குழுவினருக்கு எடுத்துரைத்தனர்.

இதனையடுத்து நல்லை ஆதீனத்திற்குச் சென்ற பௌத்த குருமார் அதன் முதல்வரைச் சந்தித்தனர் திரு சி. வீ கே. சிவஞானம் தலைமையில் ஒப்வூதியர் சம்மேளன பிரதிநிதிளும் திரு. பாலகிருஷ்ணன் தலைமையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய பிரதிநிதிகளும் திரு. குணசீலன் தலைமையில் இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழக பிரதிநிதிகளும் பௌத்த குருமாரை சந்தித்து மகஜர்களை சமர்ப்பித்தனர்.

இன்று இந்துமத குருக்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் பௌத்த பிக்குகளை சந்திக்கவுள்ளனர். (பா)

## ஊரடங்கு

வவுனியா மாவட்டம் இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களிலும் மன்னார் மாவட்டம் மன்னார் தீவு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலும் இன்று காலை 6 00 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்கு சட்டம் மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும் என கூட்டுப்படை தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

## திருமலை

கோடை காட்டுப்பகுதியின் எல்லையில் தரித்து நிற்கும் இராணுவ அணியொன்றில் மேலும் இராணுவத்தினர் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் காட்டுப்பகுதியைநோக்கி முன்னேற முயன்ற போதும் புலிகளின் கடும் தாக்குதலால் முகாமிற்குத் திரும்பியோடினர்.

முதலிக்குள முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசுப்

புப் படையினரை எதிர் கொள்ள முடியாது என்பதை அறிந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

மன்னார்,திருக்கோணமலையின் மொறவெவ பகுதிகளில் இராணுவநடவடிக்கை தொடர்கின்றன என்றும், புலிகளுக்கு எதிரான இராணுவ நடமாட்டம் தொடர்கின்றது என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

## குண்டு

தையா குமாரசாமி (33 ஐயனார் அகதிமுகாம்நாவற்குழி) நல்லையா நவரத்தினம் (30 வெற்றிலைக்கேணி) சி. நவநீதன் (12 பண்டிவிரிச்சான்) சி. சுகந்தன் [10 பண்டிவிரிச்சான்] சி சுபாசினி [7 பண்டிவிரிச்சான்].

காயமடைந்தோர் பற்றிய மேலதிக விபரங்கள் வருமாறு;

அப்புக்குட்டி ரவிச்சந்திரன் (25 நாகர் கோவில் அகதி முகாம்),ஆசிர்வாதம் கிருஷ்ணராசா (25 கட்டைக்காடு). அல்பிரட் யோகரட்ணம் [28 சக்கோட்டை. அல்வாய் வடக்கு], அன்ரன் மரியதாஸ் (17 கட்டைக்காடு) இவர்கள் நாலவரும் சாவகச்சேரி அரசினர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

செ. தங்கராசா [45 தட்டுவான் கொட்டி] இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சிறுகாயங்களுக்குள்ளான சிலர் கிளிநொச்சி அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## புலிகள்

மனிதநேய அடிப்படையில் கைதிகளின் உற்றார், உறவினர்கள் வந்து பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கியும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடுகளைச் செய்த போதும், அரசாங்கம் அதற்கு அனுமதி அளிக்காததும் சுட்டிக் காட்டப்பட்டது.

## சம்பள

சம்பள கமிஷன் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் நியாயமான சம்பள உயர்வை வழங்குவதற்காக கமிஷன் தொழிற் சங்கங்கள் மற்றும் குழுக்களுடனும் பேச்சு நடத்தவுள்ளது எனவும் தெரிவித்தார்.

தற்போதைய நிர்வாக அமைப்புகளில் செய்யப்பட்டு வரும் மாற்றங்களையும் கருத்தில் கொண்டு சம்பளக் கமிஷன் சம்பள உயர்வுகளை நிர்ணயம் செய்யும் எனவும் அவர் குறிப்பிட்டார்-

## உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி

லெப்டினன்ட் கேர்ணல் விக்ரர் ஞாபகார்த்தமாக 1986 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட உரும்பராய் ''ஒஸ்கா'' விளையாட்டுக்கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் யாழ்/திருமலை நட்சத்திரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி/செங்கதிர் விளையாட்டுக் கழகம் விளையாட உள்ளது. இவ் வாட்டம் கோண்டாவில் குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று மாலை 5.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

(சி/4327)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.